கீழடி அகழாய்வு : தமிழர் விரோத பா.ஜ.க அரசைக் கண்டித்து

மதுரையில் இன்று ஆர்ப்பாட்டம்!

தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூன் 18-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, 'அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் இன்று "மதுரை, விரகனூர் சுற்றுச் சாலை" யில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.

கீழடி ஆய்வை மறுக்கும் தமிழர் விரோத பா.ஜ.க அரசுக்குக் கண்டனம் தெரிவித்து 1.6.2025 அன்று மதுரையில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக பொதுக்குழுவில் கீழ்க்கண்ட வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்மொழி - தமிழ்ப் பண்பாடு ஆகியவை காலத்தால் முந்தையவை என்பதை அகழாய்வுகளும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளும் தொடர்ந்து மெய்ப்பித்து வருகின்றன. 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்புத் தாதிலிருந்து இரும்புப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்கிற வரலாற்று உண்மை இன்றைய நவீன அறிவியல் ஆய்வுகள் மூலமாக நிறுவப்பட்டிருப்பதைத் தமிழ்நாடு அரசு ஆதாரப்பூர்வமாக வெளியிட்டும்கூட, அதற்கு இந்தியப் பிரதமரோ, இந்திய தொல்லியல்துறையோ வாழ்த்துகூட தெரிவிக்கவில்லை.

இந்தப் பொதுக்குழு நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடந்த அகழாய்வுகளின் அடிப்படையில் தமிழர்களின் வைகை ஆற்று நாகரிகம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதற்கான தரவுகள் கிடைக்கப்பெற்று அவை உலகளாவிய ஆய்வு நிலையங்கள் மூலமாகவும் நிறுவப்பட்டிருப்பதைத் தொல்லியல் துறை சார்பில் அதன் அதிகாரியாக இருந்த அமர்நாத் ராமகிருஷ்ணா ஆய்வறிக்கையாகச் சமர்ப்பித்து ஆண்டுகளாகியும் அதனை ஏற்காமல், திருத்தங்கள் தேவை என ஒன்றிய அரசின் தொல்லியல் துறை தெரிவித்திருப்பது, தமிழ் மீதும் தமிழர்களின் பண்பாட்டின் மீதும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குள்ள வன்மத்தையே காட்டுகிறது.

தங்களின் பொய்யான - கற்பனையான சமஸ்கிருத-சரஸ்வதி ஆற்று நாகரிகத்தை, தமிழர்களின் வைகை ஆற்று - கீழடி ஆய்வுகள் உண்மைத்தரவுகளுடன் மிஞ்சிவிட்டன என்ற காழ்ப்புணர்விலிருந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளிவந்து, கீழடி ஆய்வறிக்கையை ஏற்று, இந்தியாவின் பெருமைமிகு நாகரிகமாகத் தமிழரின் நாகரிகத்தை அறிவிக்க வேண்டும் என இந்தப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

கீழடி தமிழரின் தாய்மடி! பரந்துபட்ட பார்வையோடு - அறிவியல் பூர்வமாக எங்களது தொன்மையை நிறுவுகிறோம். இதில் ஆணவ - ஆதிக்க அரசியல் செய்ய நினைத்தால், அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் என ஒன்றிய பா.ஜ.க. அரசை இப்பொதுக்குழு எச்சரிக்கிறது!

இவ்வாறு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதையடுத்து, பா.ஜ.க. அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் வருகிற 18ஆம் தேதி புதனன்று தி.மு.க. மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தும் என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி;

கீழடி என்கிற பெயரே பா.ஜ.க அரசுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது. கீழடி ஆய்வை மேற்கொள்ளவே நீதி மன்றத்தை நாடவேண்டியிருந்தது. அகழாய்வை மேற்கொண்ட அதிகாரிகள் பா.ஜ.கவின் குரலாக ஒலிக்கவில்லை என்பதற்காக அவர்கள் தூக்கி எறியப்பட்டார்கள்.

கடந்தகால அடிமை எடப்பாடி அரசும் பா.ஜ.கவினரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு கீழடி அகழாய்வைக் கிடப்பில் போட்டது. தமிழ்நாட்டில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான அரசு அமைந்ததும் கீழடி அகழாய்வுக்குப் புத்துயிர் கொடுத்ததோடு துரிதமாக பலகட்ட ஆய்வுகள் நடத்தி அருங்காட்சியகத்தையும் கட்டி யெழுப்பினார்.

அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத பா.ஜ.க அரசைக் கண்டித்து இன்று காலை 10 மணிக்கு தி.மு.க. மாணவர் அணி சார்பில், "மதுரை, விரகனூர் சுற்றுச் சாலை"யில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகி கள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாணவரணிச் செயலாளர் இரா.ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் - பல்லடம் வட்டம் - நாரணாபுரம் கிராமம்

திருச்சி - கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் விபத்து!

உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 18-

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், நாரணாபுரம் கிராமம், திருச்சி- கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், நாரணாபுரம் கிராமம், திருச்சி - கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் பல்லடம் நகராட்சி அலுவலகத்திற்கு முன்பு நால்ரோடு சந்திப்பில் நேற்று (17.6.2025) பிற்பகல் 2.50 மணியளவில் TN09 DT 4353 என்ற பதிவெண் கொண்ட கண்டெய்னர் லாரி ஒன்று வளைவில் திரும்பும்போது கட்டுப்பாட்டை இழந்து எதிர்பாராதவிதமாக கவிழ்ந்த விபத்தில், அருகில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்த பல்லடம் வட்டம், நாரணாபுரம் கிராமம், அறிவொளி நகரைச் சேர்ந்த திருமதி. மகாராணி (வயது 55) (க/பெ.நாகராஜ்) மற்றும் திருமதி.கிருத்திகா (வயது 35) க/பெ.(லேட்) செல்வராஜ் ஆகிய இரண்டு பெண்கள் கண்டெய்னரின் கீழ் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்த இரண்டு பெண்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

'எய்ம்ஸ்' கட்டுமானப் பணி! ஒன்றிய அரசின் கற்பனைக் காட்சி!

2 மக்களவைத் தேர்தல்கள் முடிந்த பிறகும் 'எய்ம்ஸ்' கட்டுமானப் பணிகள் முடியவில்லை!

வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூன் 18 -

மதுரை எய்ம்ஸ் என்ன ஆனது எனக் கேட்டதற்கு, அது தொடர்பான கற்பனைக் காட்சிகளை ஒன்றிய அரசு உருவாக்கி அளித்துள்ளது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமர்சித்துள்ளார்.

கடந்த 2019 ஜனவரி மாதம் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். ஆனால், இரண்டு மக்களவைத் தேர்தல்களுக்கு பிறகும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகள் முடிக்கப்படவில்லை. தற்போது, 9 மாதங்களில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் முப்பரிமாண வீடியோவை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.

இது குறித்து சமூகலைத்தளப் பதிவொன்றை வெளியிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்கள், "மதுரைக்கு வந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் எய்ம்ஸ் என்ன ஆனது எனச் சென்று பார்த்தாரா? எனக் கேட்டிருந்தேன்.

அதற்குப் பதிலாக, இந்தக் கற்பனைக் காட்சிகளை உருவாக்கி அளித்துள்ளார்கள் 2026 தேர்தலுக்கு இந்த ஒரு வீடியோ போதும் என நினைத்துவிட்டார்களா? இதற்கே 10 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன" என்றும் பதிவிட்டுள்ளார்.

2025 - 2026 ஆம் கல்வியாண்டிற்கான

சட்டக் கல்வி சேர்க்கையில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கல்!

நீர்வளம் - சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 18-

நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், தரமணி, கலையரங்கில் நேற்று (17.06.2025), 2025-2026-ஆம் கல்வியாண்டிற்கான சட்டக் கல்வி சேர்க்கையில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகள் வழங்கும் நிகழ்வும், சூரிய மின்சக்தி நிலைய தொடக்க விழாவும் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பொழுது நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் சீர்மிகு சட்டப்பள்ளி 5 ஆண்டு ஒருங்கிணைந்த B,A. LL.B. (Hons.), BBA.LL.B. (Hons.), B.Com.LL.B. (Hons.) & B.C.A.L.L.B (Hons,) சட்டப் படிப்புகள் மற்றும் தமிழ் நாட்டில் அமையப் பெற்றுள்ள இணைவு பெற்ற சட்டக் கல்லூரிகளின் 5 ஆண்டு B.A.L.L.B சட்டப் படிப்பிற்கான இந்த கல்வியாண்டின் சட்டக்கல்வி சேர்க்கையில் 10.06.2025 அன்று பல்கலைக் கழக இணையதளம் வாயிலாக வெளியிடப்பட்ட தரவரிசை பட்டியலின்படி மாணவர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கியதோடு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக வளாகத்தில் சூரிய மின்சக்தி நிலை யத்தினையும் தொடங்கி வைத்தார்.

மேலும், அமைச்சர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் தற்பொழுது சட்டப்படிப்புகளில் பலமாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது மூன்றாண்டு Hons. Class இவையெல்லாம் வந்திருக்கிறது. இப்பொழுது அரசு பள்ளியில் படித்து 98, 99 மற்றும் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் இப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்துள்ளார்கள். அப்பொழுதெல்லாம் தனியார் கல்லூரிகளில் சேருவதற்குத்தான் மாணவர்கள் விரும்புவார்கள். ஆனால் தற்பொழுது அரசு கல்லூரியில் சேருவதற்குத் தான் மாணவர்கள் விருப்பம் தெரிவிக்கின்றனர். இந்த மாற்றத்தைக் கொண்டுவந்த வர் நமது தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டத் துறைச் செயலாளர் சி. ஜார்ஜ் அலெக்ஸ்சாண்டர், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் பதிவாளரும் சட்ட சேர்க்கைக் குழுவின் தலைவருமான பேராசிரியர் கௌரி ரமேஷ், சட்ட சேர்க்கைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ரஞ்சித் ஓமன் ஆபிரகாம், சீர்மிகு சட்டப்பள்ளியின் புல முதன்மையர் பேராசிரியர் வி. பாலாஜி மற்றும் வளாக இயக்குநர் எஸ்.கே.அசோக் குமார் மற்றும் சட்டப் பல்கலைக் கழக உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சைதாப்பேட்டையில் இயங்கி வரும் கலைஞர் கணினி மையம் மற்றும் கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையம் ஆகியவற்றில் பயிற்சி முடித்த மாணவ மாணவியர்களுக்கு பட்டயம் மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நேற்று (17625) மேட்டுப்பாளையம் மார்க்கெட் அருகில் உள்ள வி கே எம் மஹாலில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இவ்விழாவில் கலைஞர் கணினி மையத்தின் கீழ் கணினி பயிற்சி மற்றும் Tally pro பயிற்சிப் பெற்ற 13 பேட்ச் மாணவ மாணவியர்கள் 80 பேருக்கும், அதேபோல் கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையத்தின் மூலம் அழகு கலை பயிற்சி மற்றும் டைலரிங் பயிற்சி முடித்த 140 பேருக்கும், Spoken இங்கிலீஷ் பயிற்சி பெற்ற 120 மாணவ மாணவியர்களுக்கு விஜய் டிவி நீயா? நானா? புகழ் திரு கோபிநாத் பட்டயம் மற்றும் சான்றிதழ்கள், Bag மற்றும் நினைவு பரிசுகளை வழங்கி தன்னம்பிக்கை உரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், யேசுதாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமையில்

திரு.வி.க.நகர் தொகுதி சார்பில் 10 ஆம் - 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை!

அமைச்சர் தங்கம் தென்னரசு - நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் - நடிகர் ஆகாஷ் வழங்கினர்

சென்னை, ஜூன் 18 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுகவி.க.நகர் தொகுதி சார்பில், ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் "செம்மொழி நாள்" விழாவை முன்னிட்டு 10ம் வகுப்பு (ம) 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உபகரணங்களை - நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, திரைப்பட கலைஞர் நடிகர் எம்.எஸ்.பாஸ்கர், திரைப்பட கலைஞர் நடிகர். ஆகாஷ் ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுகவி.க.நகர் தொகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி 11" கல்விப் பணியே பேரறம்! கலைஞர் வாழ்வில் முதலிடம்! எனும் தலைப்பில் மாபெரும் கல்வி உதவித்தொகை 17/06/25 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, பெரம்பூர், ஜமாலியா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, செ.தமிழ் வேந்தன், எம்.சாமிகண்ணு, பெரம்பூர் ஆர்.ராஜன், புனிதவதித்திராசன் எம்.சி, சரிதாம கேஷ்குமார் எம்.சி, லயன்.பி. உதயகுமார் முன்னிலை வகித்தனர்.

தில்லை கதிரவன், புல்லட். கி.ரமேஷ், பி.புவனவதி, கினார் ஆறுமுகம், பரிமளா சரேஷ், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.ஏ.டீக்கா, எம்.இசட்அபோய், மு.சரவணன் எம்.சி, ரமணி லோகேஷ் எம்.சி, தமிழ் செல்வி சசிகுமார் எம்.சி வரவேற்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில், 10ம் வகுப்பு (ம) 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உபகரணங்களை - மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்தங்கம் தென்னரசு, திரைப்பட கலைஞர் நடிகர் எம்.எஸ்.பாஸ்கர், திரைப்பட கலைஞர் நடிகர். ஆகாஷ் ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், பி.விஜயகுமார், இரா. வீரமணி, ம.அசோக்குமார்,வி.க.நகர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.கோவிந்தன் பி.சுகுமார் த.கருணாநிதி வனஜாசண்முகம் அ.கருணாநிதி ,வி.க.நகர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் தே.சுரேஷ் குமார் (எ] பொல்லு சுரேஷ் எம்.தமிழ் வி.க.வெங்கடேசன் எஸ்.சசிகுமார்

எஸ்.வெங்கடேசன் பா.பி. தாஸ்,வி.க.நகர் வடக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: வி.ஜெகன் கே.என்.விஜய்[எ]ஸ் வீட்பாபு டி.சீனிவாசன் மதுரை பிரகாசம் எம்.துரைசாமி ஜெ. அண்ணாதுரை க.எழிலன் டி.ராஜு பி.இளஞ்செழியன் பி.சத்தீஷ் ஆர்.ராஜராஜன் வ. நாமதேவன் எம்.விஜயகுமார் இரா.புருஷோத்தமன் எல்.சுப்பிரமணி அ.விஜயகுமார் வெல்டிங்எஸ்.பாபு வே.து.தாமரைச் செல்வன் நெல்லைமா. முத்தையா பா.பாபு மனேகரன் கி.நாகலிங்கம் அ.கதிரவன் எச். திவாகர் ஆர்.பிரகாஷ், மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள் எல்.பாண்டுரங்கன் இ. ஜோஸ்வா ஜெ.சத்திய மோகன் எம்.ஜி.குமாரசாமி அந்தோணி ஜான் இ.என். கே.வீரமணி ஜெ.வசந்த்கோகுல் இ.விநாயகம் எம்.கமலநாதன் எஸ்.சந்தனராஜ் எஸ்.பிரீத்தி வி.பிரகாஷ் எஸ்.கே.சிவகுமார் பா.ஜலபூசனம் வி.வில்பிரட்ஜான் எப்.செபாஸ்டின் க. ஞானசேகர் இ.எஸ்.ரவிச்சந்திரன் ஆர்.தினேஷ் நெடுஞ்செழியன் எஸ்.குப்புசாமி கே.லட்சுமி பி.ஜெயசிங்ஜான்தாமஸ் எஸ். காதார்மீரன்

ஜி.சூரியகுமார் அ.சாக்ரடீஸ் பாபு ந.ருபகாந்தன் எஸ்.சதீஷ்குமார் எல்.ஜான்ரூவில் ஆர்.நிலவழகன் புல்லட்.என்.பாஸ்கர் அ.சேதுராமன் சாவித்திரிஅன்பழகன் கனல்கங்கா கோ.கருணாகரன் இரா.தனசேகர் எம்.சண்முகவேல் எஸ்.எல்.நாராயணன் எம்.எஸ்.மைனர்பாபு க.ராமமூர்த்தி கேபிள்எஸ்.சுரேஷ் சுரேஷ்கோபி எஸ்.சதீஷ்குமார் ஆர்.சீனிவாசன் பி. விவேகானந்தன் ந.தமிழ்மணி ஏ.ஜி.எஸ்.கோல்டுஜி, எம்.ஜெயபால் சி.எம்.மணிகண்டன் ஆர். கிருஷ்ணவேணி எச்.ஜியாவுதீன் எம்.அருண்குமார் எஸ்.வசந்தா வி.செந்தில்குமார் ஜி.ராஜ்குமார் அ.சத்யா எஸ்.ஜெயகுமார் கே.ஹரிபி ரசாத் கே.எம்.கார்டன்.சத்தியா Dr.வினோத் இளங்கோ க.ராஜேந்திரன் ஜெ.அவினாஷ் சி.கௌதம் மு.கௌரி,வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் ஜெ. மணிகண்டன் பி.ஸ்ரீதர்ராஜன் எம்.சக்திவேல் ஏ.சகிலா ஈஸ்வரி கண்ணன் மா.சாந்தி இரா.பிரியாமகே ஸ்வரி எஸ்.ஷகிலா ஜெ.எம்.நிறைமொழி பி.ஜெகதீஷ் எஸ்.ராஜேஷ் எஸ்.விஜய்மகேந்திரன் தியாகராஜன் சி. ராஜேஷ்குமார் ர.மனோ ஜ்குமார் வி.பகவத்சிங் சி.சிவஞானம் மா.திவ்யா

வி.ஸ்டீபன் டி.செல்வா சே.புருஷோத் தி.கிருஷ்ணகுமாரி, வி.க.நகர் வடக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்: சீ. சஞ்சீவ்குமார் அ.வினோத்ராஜ் கோ.சரண்ரா ஜ் சி.ஆனந்த் ஆ.அரவிந்த்ராஜ் இரா.மின்னல் ராஜ் [எ]மால்கம் எஸ்.சரத்குமார் அ.முகமது ரஃபி, கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நலத்திட்ட விழாவில் வட்ட கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு – (இரண்டு உறை) இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒப்பந்தப்புள்ளி கோட்பு எண்.	09/ கோ. அழைப்பு மையம்/ முதிவ.அ /தபொ / வே /2025 / நாள்:11.06.2025.
நிதி ஆதாரம்	த.கு.வ.வாரிய நிதி
ஒப்பந்தக்காரர் தகுதி	நிறுவனங்கள் சட்டம் 1956/2013 அல்லது கூட்டாண்மை சட்டம் 1932 அல்லது தனிநபர் உரிமையாளர் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு சட்ட நிறுவனம்
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	தலைமைப் பொறியாளர், த.கு.வ. வாரியம், வேலூர்– 6.
ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் இணையதளம் மூலமாக	19.06.2025 முதல் 25.06.2025, 15.00 மணி வரை (as per server time)
இணையதள முகவரி	"https://tntenders.gov.in" (மின்னணு ஒப்பந்தம் முறையில்)
ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை	மின்னணு முறையில் இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக.
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம்	23.06.2025 அன்று மு.ப 11.00 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ வாரியம், வேலூர் – 6.
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	25.06.2025 அன்று 15.00 மணி வரை மின்னணு ஒப்பந்தம் முறையில் டெண்டர் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	26.06.2025 அன்று 15.30 மணிக்கு த.கு.வ. வாரியம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், வேலூர் மின்னணு ஒப்பந்தம் முறையில்

வ. எண்.	திட்டத்தின் பெயர்	பணியின் உத்தேச மதிப்பு (ரூ. கோடியில்) (ச.ம.சே.வரி 18% உட்பட)	முன்வைப்பு தொகை (ரூ. இலட்சங்களில்)
1	தமிழ்நாட்டில் (சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து) நீர் வழங்கல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக த.கு.வ. வாரியம் மூலம் பொதுவான அழைப்பு மையம் மற்றும் குறை தீர்க்கும் அமைப்பை நிறுவுவதற்கான முன்மொழிவு (RFP) கோரிக்கை [செயல்படுத்துதல் காலம்: 5 மாதங்கள், செயல்பாட்டு காலம்: 12 மாதங்கள்].	4.00	3.00

செ.ம.தொ.இ/ 3090 /ஒப்பந்தப்புள்ளி/2025 தேவை இத்தருணம் - குடிநீர் சிக்கனம்

தலைமைப் பொறியாளர் (பொ), த.கு.வ.வாரியம், வேலூர்–6